DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : சேகர் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : முனியாண்டி |
| Village | : சின்னையம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:47 A.M. - 11:57 A.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி ஞானபண்டிதன் என்பவரை தெரியும். இவ்வழக்கில் இறந்து போன சத்யா என் மகள் ஆவார். கடந்த 04.05.2024 ம் தேதி பகல் சுமார் 1.30 மணியளவில் எனது TVS XL இருசக்கர வாகனத்தில் என் மகள் சத்யா கோட்டையூரில் உள்ள எனது அப்பாவிற்கு சாப்பாடு கொடுத்துவிட்டு திரும்ப எங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது, சின்னையம்பட்டி பிரிவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது மற்றொரு இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தவறான பாதையில் வந்து வாகனத்தை திருப்பியபோது, என் மகள் சத்யாவின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் போன் மூலம் தகவல் சொன்னார்கள். அன்று நான் மதுரையில் இருந்ததால் என் மனைவி லெட்சுமியை அனுப்பி வைத்தேன்.

2. என் மனைவி லெட்சுமி சம்பவ இடத்திற்கே சென்று என் மகளை பார்த்துவிட்டு தகவல் சொல்லிவிட்டு மணப்பாறை JK தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நானும் மணப்பாறை JK தனியார் மருத்துவமனை சென்று என் மகளைப் பார்த்த போது, என் மகளுக்கு வயிற்றில் இரைப்பை மற்றும் பித்தப்பை சேதமடைந்திருப்பதாகவும், அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் என் மகளை மேல் சிகிச்சைக்காக திருச்சி SRM மருத்துவமனையில் சேர்த்து அங்கு என் மகள் 12.05.2024 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என் மகள் மீது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் ஞானப்பண்டிதன் ஆகும். அவர் ஓட்டி வந்தது கியர் உள்ள இருசக்கர வாகனம் ஆகும். பின்னர் நான் நத்தம் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் சொல்லச் சொல்ல மனு எழுதும் நபர் ஒருவர் எழுதிக் கொடுத்ததை நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.25 14:52:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : பாலகிருஷ்ணன் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னச்சாமி |
| Village | : நல்லூர் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 25/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:58 A.M. - 12:10 P.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து இருசக்கர வாகனம் பழுது பார்க்கும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். இவ்வழக்கில் இறந்து போன சத்யா என்பவரை தெரியும். மேற்படி விபத்து ஏற்படுத்திய நபரை சம்பவத்தன்றுதான் முதல் முறையாக பார்த்தேன். ஆளைப் பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். சரியாக ஒரு வருடம் முன்பாக மதியம் 1.00 – 1.30 மணியளவில் சின்னையம்பட்டி விலக்கில் நான் எனது கடைக்கு பழுது நீக்க வந்த இருசக்கர வாகனத்தை டிரையல் பார்ப்பதற்காக ஓட்டி சென்றுவிட்டு திரும்பி வரும்போது, சிறுகுடி சாலையில் இருந்து Splendor Pro புளூ கலர் இருசக்கர வாகனத்தில் 2 நபர்கள் வேகமாக வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் நான் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு பின்னர் அவர்களுக்கு பின்னால் சென்று கொண்டிருந்தேன். அவர்கள் எனக்கு முன்பாக 100 மீட்டர் தொலைவில் வேகமாக சென்று கொண்டிருந்தார்கள்.

2. அப்போது எங்களுக்கு எதிர் திசையான கோட்டையூரிலிருந்து சிறுகுடி நோக்கி சத்யா என்பவர் XL இருசக்கர வாகனத்தில் சாலையின் இடதுபுறமாக வந்து கொண்டிருந்தவர் மீது எனக்கு முன்பாக சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வலது புறமாக ஏறி XL இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டார். அதில் சத்யா என்பவர் அவரது வலது கை பக்கமாக சாலையிலும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் விபத்தை ஏற்படுத்தி சத்யாவிற்கு இடது கை புறமாக வாகனத்துடன் கீழே விழுந்து கிடந்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் காயம் இல்லை. நான் சென்று பார்த்தபோது, அந்த பெண்ணால் எழுந்திருக்க முடியாமல் வாகனத்திலே விழுந்து கிடந்தார். அவருக்கு காலில் சாதாரண காயம் காணப்பட்டது. வயிறு வலிப்பதாகவும், எழுந்திருக்க முடியவில்லை என்று கூறியதால் அவரை தூக்கிவிட்டேன். அதனால் அவரால் நிற்க முடியவில்லை. எனவே ஓரமாக உட்கார வைத்துவிட்டு அவரது வீட்டிற்கு தகவல் சொன்னேன்.

3. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் பெயர் ஞானப்பண்டிதன் என சொன்னார். பின்னர் சத்யாவின் உறவினர்களும், அருகில் இருந்தவர்கள் வந்த பின்னர் அவருக்கு வயிறு வலி அதிகமாக இருந்ததால் மணப்பாறை மருத்துவமனைக்கு காரில் அழைத்துச் சென்றார்கள். பின்னர் சத்யாவை திருச்சி மருத்துவமனையில் சிகிச்சையில் வைத்திருப்பதாக அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். பின்னர் ஒரு நாள் காலை சுமார் 4.00, 4.30 மணியளவில் சத்யா இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan.,
B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.25 14:52:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : பொன்னுச்சாமி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : பழநி |
| Village | : குரும்பப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12:11 P.M. - 12:17 P.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து புளியம்பழம் வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன சத்யா என்பவரை நான் பார்த்திருக்கிறேன். இவ்வழக்கின் எதிரியை சம்பவத்தன்றுதான் நான் பார்த்தேன். கடந்த 04.05.2024 ம் தேதி பகல் 1.30 மணியளவில் கோட்டையூருக்கும், சின்னையம்பட்டிக்கும் இடையில் உள்ள பிரிவில் நாங்கள் புளியம்பழம் அடித்துவிட்டு, சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது நாங்கள் இருந்த இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி XL இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு பெண்ணின் மீது தெற்கிலிருந்து மற்றொரு இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிகவேகமாக ஓட்டிச் சென்று இடது பக்கமாக சென்று கொண்டிருந்த பெண்ணின் வாகனத்தின் மீது இவர் வலது புறமாக ஏறிச் சென்று வேகமாக மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார்.

2. அந்த பெண்ணுக்கு காலில் சாதாரண ரத்த காயம் இருந்தது. அவரது வயிற்றில் பெரிய இருசக்கர வாகனம் மோதியதில் பலத்த காயம் ஏற்பட்டு அவர் வயிற்றை பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக வந்த அ.சா.2, அந்த பெண்ணைத் தூக்கி உதவி செய்தார். பின்னர் அந்த பெண்ணின் உறவினர்கள் வந்ததும் காரில் ஏற்றி மணப்பாறையில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் ஓட்டி வந்தது பெரிய இருசக்கர வாகனம் ஆகும். எனக்குப் படிக்கத் தெரியாததால் வாகனத்தின் பெயர் தெரியாது. பின்னர் சத்யாவை திருச்சியில் உள்ள மற்றொரு மருத்துவமனையில் சேர்த்திருந்த நிலையில் 8 நாட்கள் கழித்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.25 14:52:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 128/2024 | LW- | 4 | PW- | 4 |

| | |
|---|---|
| Name | : லெட்சுமி (கேள்வியுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சேகர் |
| Village | : சின்னையம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 42/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of April 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12:18 P.M. - 12:25 P.M.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். இவ்வழக்கில் இறந்து போன சத்யா என்பவர் என் மகள். இவ்வழக்கின் எதிரியை சம்பவ இடத்தில் நான் பார்த்தேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் பகல் 1.00 மணியளவில் சின்னையம்பட்டி பிரிவில் என் மகள் சத்யா எங்களது இருசக்கர வாகனத்தில் கோட்டையூர் சென்று என் மாமனாருக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு திரும்பி வரும்போது, மற்றொரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள். அதன்பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, என் மகளின் வலது கால் தொடையில் ரத்தக் காயம் ஏற்பட்டு அடி வயிறு உட்கார முடியாமல் பலத்த உள் காயத்துடனும், பேச முடியாத நிலையில் இருந்தார். என் மகளிடம் கேட்டபோது நான்

சாலையின் ஓரமாக வந்து கொண்டிருந்தபோது, எதிர் திசையில் வந்தவர் வேண்டுமென்றே வந்து என் மீது இடித்துவிட்டார் என்று கூறினார்.

2. மேலும் சம்பவ இடத்தில் எதிரி மயக்கமாக கிடந்தார். சிறிது நேரத்தில் நான் திரும்பி பார்த்தபோது அவரையும், அவரது வாகனத்தையும் காணவில்லை. பின்னர் என் மகளை மணப்பாறையில் உள்ள அறிவழகன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். என் மகளுக்கு ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு, குடலில் அசைவு இல்லை என்று சொன்னார்கள். அதனால் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி SRM மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு என் மகள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.04.25 14:52:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்